# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 4

### அறிவிப்புகள்
### 2021-2022

அச்சிட்டோர் : அரசு மைய அச்சகம், சென்னை—600 001.

# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை

## மானியக் கோரிக்கை எண். 4

## அறிவிப்புகள்
## 2021-2022

**என். கயல்விழி செல்வராஜ்**
ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர்**

**நலத்துறை**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பில் 23 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**என். கயல்விழி செல்வராஜ்**

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்

**1. ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் 150 பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் ஆய்வக கட்டடங்கள் கட்டப்படும்.**

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1138 பள்ளிகளில் பயிலும் 83,259 மாணாக்கரின் கல்வி நலனை உறுதி செய்யும் பொருட்டும், மாணாக்கரின் கற்றல் திறனை மேம்படுத்துவதற்கு ஏற்ற சூழலை உருவாக்கும் வகையிலும், 150 பள்ளிகளில் ரூ.100 கோடி மதிப்பீட்டில் புதிய வகுப்பறைகள் மற்றும் அறிவியல் ஆய்வகக் கட்டடங்கள் கட்டப்படும்.

**2. 39 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 100 கூடுதல் வகுப்பறைக் கட்டடங்கள், ஆய்வகக் கூடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் ரூ.21.13 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் 318 உண்டி உறைவிடப் பள்ளிகள் இயங்கி வருகின்றன. இதில் தருமபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, சேலம், திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, வேலூர் மற்றும் நீலகிரி மாவட்டத்திலுள்ள 14 ஆரம்பப் பள்ளிகள், 11 நடுநிலைப் பள்ளிகள், 15 உயர்நிலைப்பள்ளிகள், 9 மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் 39 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.15 கோடி செலவில் கூடுதல் வகுப்பறைகளும், 45 உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.6.13 கோடி செலவில் சுற்றுச்சுவர்களும் மொத்தம் ரூ.21.13 கோடி செலவில் கட்டப்படும்.

## 3. ஆதிதிராவிடர் குடியிருப்புகளில் 20 சமுதாயக் கூடங்கள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

ஆதிதிராவிட மக்கள் தங்கள் வீட்டு சுப நிகழ்ச்சிகளை சிறப்பாக நடத்தும் வகையில், 20 இடங்களில், மணமகன்–மணமகள் அறைகள், மணமேடை, பார்வையாளர் அரங்கம், விருந்தினர் அறைகள், கழிவறைக்கூடம், மேல்நிலைக் குடிநீர் தொட்டி, அவசியமான அறைகலன்கள், பாத்திரங்கள், உணவுமேசை, நாற்காலிகள் அடங்கிய உணவருந்தும் அறை என அனைத்து வசதிகளுடன் கூடிய 2 0 சமுதாயக் கூடங்கள் தலா ரூ.1.25 கோடி வீதம் ரூ.25 கோடி மதிப்பில் கட்டப்படும்.

**4. 1000 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு துரித மின் இணைப்புத் திட்டத்தின் (Tatkal Scheme) கீழ் ரூ.23.28 கோடி செலவில் 90 சதவீதம் மானியம் வழங்கப்படும்.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் கிராமப்புறங்களில் பெரும்பாலும் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். எனவே, விவசாயத்திற்கான இலவச மின் இணைப்புக்காக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மூலம் வழங்கப்படும் துரித மின் இணைப்புத் திட்டத்தில் (Tatkal Scheme) செலுத்தப்பட வேண்டிய வைப்புத் தொகை குதிரைத் திறனுக்கேற்ப ரூ. 2.50 இலட்சம் முதல் ரூ.4.00 இலட்சம் வரை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1000 ஆதி திராவிட மற்றும் பழங்குடியின விவசாயிகள் இலவச மின் இணைப்பை விரைவில் பெற்றிட தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகையில் 90 சதவீதம் (ரூ.2.25 இலட்சம் முதல் ரூ.3.60 இலட்சம் வரை) மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசுக்கு ஏற்படும் செலவு ரூ.23.28 கோடி.

## 5. காஞ்சிபுரம் மாவட்டத்தில் வீடற்ற இருளர் இன பழங்குடியினருக்கு ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்.

பெரும்பாலான பழங்குடியின மக்கள் பொருளாதாரத்தில் பின்தங்கி வாழ்ந்து வருகின்றனர். வீடற்ற பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் தமிழ்நாடு அரசால் ஆண்டுதோறும் வழங்கப்பட்டு வருகின்றன. இவ்வாறு காஞ்சிபுரம் மாவட்டத்தில் பட்டா வழங்கப்பட்ட 443 இருளர் இன பழங்குடியினர் குடும்பங்களுக்கு தலா ரூ.3.00 இலட்சம் மதிப்பீட்டில் ரூ.13.29 கோடி மதிப்பீட்டில் 443 புதிய வீடுகள் கட்டப்படும்.

**6. வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.**

ஆதிதிராவிட மாணாக்கரின் உயர் கல்விக்கான வாய்ப்புகளை பெருக்கிடும் வகையிலும், அவர்கள் பாதுகாப்பாக தங்கி கல்வி பயிலும் வகையிலும், வேலூர் ஆதிதிராவிடர் முதுகலை கல்லூரி மாணவியர் விடுதி, விழுப்புரம் மாவட்டம், திண்டிவனம் மற்றும் சேலம் மாவட்டம், மரவனேரி ஆதிதிராவிடர் கல்லூரி மாணவர் விடுதிகளுக்கு அனைத்து வசதிகளுடன் கூடிய புதிய கட்டடங்கள் ரூ.10.75 கோடி மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 7. 13 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கும் ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளில் மாணாக்கரின் பாதுகாப்பினை உறுதி செய்திட திருச்சிராப்பள்ளி, தேனி, திண்டுக்கல், அரியலூர், திருவாரூர், நாகப்பட்டினம், பெரம்பலூர், மதுரை, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் திருப்பூர் ஆகிய 11 மாவட்டங்களில் உள்ள 1 3 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகளுக்கு ரூ.4.00 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர் கட்டப்படும்.

**8. 31 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் கழிப்பறைகள் (Toilets) கட்டப்படும்.**

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் கோயம்புத்தூர், தர்மபுரி, ஈரோடு, கள்ளக்குறிச்சி, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய 7 மாவட்டங்களில் இயங்கும் 31 பழங்குடியினர் நல உண்டி உறைவிடப் பள்ளிகளில் 65 கழிப்பறைகள் தலா ரூ.7.00 இலட்சம் வீதம் ரூ.4.50 கோடி மதிப்பீட்டில் புதிதாக கட்டப்படும்.

## 9. 92 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் 48 விடுதிகளுக்கு ரூ.3.46 கோடி மதிப்பீட்டில் தளவாடப் பொருட்கள் (Furnitures) வழங்கப்படும்.

பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கிவரும் பள்ளிகளில் படிக்கும் மாணாக்கர் படிப்பதற்கு ஏதுவாக 92 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 2385 நீள் இருக்கைகள் மற்றும் சாய்வு மேசைகள் (Bench and Desk) தலா ரூ.9,500/– வீதம் ரூ.2.27 கோடி செலவிலும், விடுதிகளில் தங்கி படிக்கும் மாணாக்கர் தேவையை கருத்தில் கொண்டு 4 8 பழங்குடியினர் மாணாக்கர் விடுதிகளுக்கு 1200 இரண்டு அடுக்கு கட்டில்கள் (Bunker Beds) ரூ.1.2 கோடி செலவிலும், ஆக மொத்தம் ரூ.3.46 கோடி செலவில் வழங்கப்படும்.

**10. மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படி ஒன்றிய அரசு வழங்குவதற்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.**

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகை பெற இயலாத மாணாக்கருக்கு, மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ், பராமரிப்புப்படி மற்றும் கட்டாயமான திருப்பி அளிக்கப்படாத கட்டணங்கள் கல்வி உதவித் தொகையாக வழங்கப்பட்டு வருகிறது. இதற்கு முன்பு, 2011–2012–ஆம் கல்வியாண்டில் இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படும் பராமரிப்புப் படி உயர்த்தப்பட்டது.

ஒன்றிய அரசின் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 2020–21–ஆம் ஆண்டு முதல் பராமரிப்புப்படி உயர்த்தி வழங்கப்பட்டு வரும் விகிதத்திற்கு இணையாக மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பராமரிப்புப்படியும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவு ரூ.4.63 கோடி ஆகும். இத்திட்டத்தின் கீழ் 26,024 மாணாக்கர் பயனடைவர்.

**11. கடலூர் மாவட்டம் – விருத்தாச்சலம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டம் – நாகப்பட்டினம் ஆகிய இடங்களில் மூன்று புதிய கல்லூரி மாணவியர் விடுதிகள் ரூ.2 கோடி செலவில் தொடங்கப்படும்.**

ஆதி திராவிடர் இன மாணவியர் உயர் கல்வி பயில தொலை தூரம் செல்வதைத் தவிர்க்கவும், அவர்கள் உயர் கல்வி பயில்வதை ஊக்குவிக்கவும், விருத்தாசலம், கள்ளக்குறிச்சி மற்றும் நாகப்பட்டினம் ஆகிய மூன்று இடங்களில், ஒரு விடுதியில் 50 மாணவியர் தங்கும் வகையில் புதிய விடுதிகள் ரூ.2 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்படும்.

## 12. ஆதிதிராவிடர் விடுதி மாணாக்கருக்கு விழா நாட்களில் வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் இரண்டு மடங்காக உயர்த்தி வழங்கப்படும்.

ஆதி திராவிடர், பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு பொங்கல், குடியரசு தினம், தமிழ்வருடப் பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய 5 விழா நாட்களில் தற்போது வழங்கப்பட்டு வரும் சிறப்பு உணவுக் கட்டணம் 19.04.2012–க்கு பிறகு உயர்த்தி வழங்கப்படாத நிலையில், தற்போது விலைவாசி உயர்வுக்கேற்றவாறு பள்ளி விடுதி மாணாக்கருக்கு ரூ.20/–லிருந்து ரூ.40/– ஆகவும், கல்லூரி விடுதி மாணாக்கருக்கு ரூ.40/–லிருந்து ரூ.80/– ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 1,25,295 மாணாக்கர் பயன்பெறுவர். இதற்காக அரசுக்கு ஏற்படும் கூடுதல் செலவினம் ரூ.1.42 கோடி.

## 13. தஞ்சாவூர் மற்றும் வேலூர் மாவட்டங்களிலுள்ள ஆதிதிராவிடர் நல பள்ளிகளுக்கு ரூ.92.00 இலட்சம் மதிப்பீட்டில் வகுப்பறை கட்டடங்கள் மற்றும் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

தஞ்சாவூர் மாவட்டம், கண்ணந்தங்குடி, மேலையூர் அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளியில் இரண்டு புதிய வகுப்பறைக் கட்டடங்கள் மற்றும் சுற்றுச் சுவரும், வேலூர் மாவட்டம், பேர்ணாம்பட்டு அரசு ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளி மற்றும் பென்னாத்தூர் அரசு ஆதிதிராவிடர் நலத் தொடக்கப்பள்ளி ஆகிய பள்ளிகளில் சுற்றுச் சுவர்களும் ரூ.92 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 14. 512 ஆதிதிராவிடர் நல விடுதிகளுக்கு ரூ.46 இலட்சம் மதிப்பீட்டில் மின் அரைப்பான்கள் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1326 பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் சமையலுக்கு உதவியாகவும் மாணாக்கருக்கு உணவினை உரிய நேரத்தில் வழங்கிட ஏதுவாகவும், தலா ரூ.9,000/−வீதம், 512 மின் அரைப்பான்கள் மொத்தம் ரூ.46.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**15. 51 ஆதிதிராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள கணினி ஆய்வகங்களுக்கு இன்வர்ட்டர் (Inverter) ரூ.87 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

ஆதிதிராவிடர் நலத்துறையின்கீழ் இயங்கி வரும் 98 மேல்நிலைப் பள்ளிகளில் கணினி அறிவியல் பாடப்பிரிவு பயிலும் மாணாக்கருக்காக 51 கணினி ஆய்வகங்களுக்கு 6 மின்கலன்களுடன் கூடிய இன்வர்ட்டர்கள் (Inverters) ரூ.87.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**16. 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.3 கோடி செலவில் நீர்பாசனத்திற்கான பிவிசி குழாய்கள் (PVC Pipes) வாங்குவதற்காக தலா ரூ.15,000/- மானியமாக வழங்கப்படும்.**

1300 ஆதிதிராவிட மற்றும் 700 பழங்குடியின விவசாயிகள் தங்கள் வேளாண் நிலத்தில் நீர்ப் பாசனத்திற்கு பயன்படுத்தும் பிவிசி குழாய்கள் (PVC pipes) வாங்குவதற்கு தலா ரூ.15,000/- மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசிற்கு ஏற்படும் செலவினம் ரூ.3.00 கோடி.

**17. 2000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு ரூ.2 கோடி செலவில் புதிய மின் மோட்டார் வாங்க தலா ரூ.10,000/- மானியமாக வழங்கப்படும்.**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் (தாட்கோ) மூலம் 1800 ஆதிதிராவிட மற்றும் 200 பழங்குடியின விவசாயிகள் தங்கள் நில மேம்பாட்டிற்காக புதிய மின் மோட்டார் அல்லது பழைய மின் மோட்டாருக்கு பதில் புதிய மின் மோட்டார் வாங்கிட தலா ரூ.10,000/- மானியமாக வழங்கப்படும். இதற்காக அரசு ரூ.2.00 கோடி செலவு மேற்கொள்ளும்.

**18. 5000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, வேளாண் காடுகள் (Agro forestry), நர்சரி செடிகள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் பராமரிப்பு மற்றும் பழுது நீக்கம் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் வழங்கப்படும்.**

5000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகளுக்கு தோட்டக்கலை, காய்கறி மற்றும் பழ வகைகள் சாகுபடி, வேளாண்காடுகள், நர்சரி செடிகள் உருவாக்கி விற்பனை செய்தல், மண்புழு உரம் தயாரித்தல், விவசாய மேலாண்மைப் பயிற்சிகள் மற்றும் அறுவடை தொழில்நுட்ப இயந்திரங்கள், முதன்மை பதப்படுத்தும் இயந்திரங்கள், வேளாண் தொழில்நுட்ப இயந்திரங்கள் மற்றும் ஆழ்துளைக் கிணறு அமைக்கும் இயந்திரங்கள் ஆகிய இயந்திரங்கள் தொடர்பான பராமரித்தல் மற்றும் பழுது நீக்கம் செய்தல் போன்ற பயிற்சிகள் ரூ.1.70 கோடி செலவில் சம்பந்தப்பட்ட அரசு துறைகள் மூலம் வழங்கப்படும்.

## 19. 5000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு தொழில் மேலாண்மை பயிற்சிகள் ரூ.2 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்படும்.

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கான பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் தொழில் முனைவு ஏற்படுத்தி தரும் வகையில் கடன் பெற 5000 தொழில் முனைவோர் தேர்தெடுக்கப்பட்டு அவர்களை ஊக்கப் படுத்தும் வகையில், அவர்களுக்கு மாவட்ட அளவில் 7 நாள் தொழில் மேலாண்மைப் பயிற்சிகள் தகுதியான நிறுவனங்கள் மூலம் ரூ.2 கோடி செலவில் அனைத்து மாவட்டங்களிலும் வழங்கப்படும்.

**20. 25 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு அடைகாப்பகச் சேவை (Incubation Support) வழங்கும் புதிய திட்டம் ரூ.2 கோடி செலவில் செயல்படுத்தப்படும்.**

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களின் புதுமைத் தொழில் முனைவை உறுதிப்படுத்திடும் வகையில், சென்னை Indian Institute of Technology (IIT) மற்றும் Tamil Nadu Start Up Seed Grant Fund (TANSEED) உதவியுடன் புதிய தொழில் நிறுவனங்கள் (start up ventures) அமைக்க 25 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின தொழில் முனைவோருக்கு புதுமைத் தொழில் முனைவு அடைகாப்பகச் சேவை (Incubation support) ரூ.2 கோடி செலவில் வழங்கும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

## 21. பயிற்சி மற்றும் சான்றிதழ் பெற்ற பழங்குடியின பாரம்பரிய சமூக சுகாதார திறனாளர்களுக்கு (Traditional Tribal Healers) சுயமாக தொழில் துவங்க ரூ.50,000/- வீதம் 100 நபர்களுக்கு மானியம் வழங்கப்படும்.

பாரம்பரிய, சமூக, சுகாதார திறன்பெற்ற 100 பழங்குடியின நபர்களை தேர்வு செய்து, அவர்களுக்கு 2 மாத களப்பயிற்சியோடு 6 மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். சான்றிதழ் பெறுபவர்கள் சுயமாக தொழில் துவங்க ஏதுவாக உரிய கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்திட உதவும் வகையில் 100 பழங்குடியின பயனாளிகளுக்கு தலா ரூ.50,000/-வீதம், மொத்தம் ரூ.50 இலட்சம் செலவில் மானியமாக வழங்கப்படும்.

**22. தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரிய உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் ஏனைய நல வாரியங்களில் வழங்கப்படும் உதவித் தொகைக்கு இணையாக உயர்த்தி வழங்கப்படும்.**

தமிழ்நாடு தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் கீழ் பதிவு செய்துள்ள உறுப்பினர்களுக்கும், அவர்களைச் சார்ந்தவர்களுக்கும் இதுவரை வழங்கப்பட்டு வந்த இயற்கை மரண உதவித் தொகை, கல்வி உதவித் தொகை. திருமண உதவித் தொகை, முதியோர் ஓய்வூதியம் மற்றும் ஈமச்சடங்கு உதவித் தொகை ஆகிய நலத்திட்ட உதவிகள் இதர நல வாரியங்களால் வழங்கப்பட்டு வரும் உதவித் தொகைக்கு இணையாக ரூ.1.53 கோடி செலவில் உயர்த்தி வழங்கப்படும்.

## 23. தாட்கோ செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு ரூ.50 இலட்சம் செலவில் மொத்த அளவியல் கருவிகள் வழங்கப்படும்.

தாட்கோ செயல்படுத்தும் கட்டுமானப் பணிகளுக்கு உதவிடும் வகையில் கோட்ட செயற்பொறியாளர் அலுவலகங்களுக்கு 10 மொத்த அளவியல் கருவிகள் (Total Station Instruments) ரூ.50.00 இலட்சம் செலவில் வழங்கப்படும்.

**என். கயல்விழி செல்வராஜ்**
**ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர்**